4th February 1966]

அரிஜன மாணவர் விடுதிகள்

* 94 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) 1964-65-ல் ஏற்படுத்தப்பட்ட ஹரிஜன மாணவர் விடுதிகள் எத்தனை ?

(இ) அவற்றுள் எத்தனை வாடகைக் கட்டடங்களில் நிறுவப்பட்டன ?

(உ) அவற்றிற்கான வாடகைத் தொகை மார்ச் மாதம் முதல் தேதி 1965-ம் ஆண்டு வரை கொடுக்கப்படாமலிருப்பது எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1964-65-ல் அரசாங்க ஹரிஜன மாணவர் விடுதிகள் பதின்மூன்றைப் புதிதாகத் துவக்கவேண்டும் என்றும், அரசாங்க உதவி பெறுகிற மாணவர் விடுதிகள் ஆறினை அரசாங்கம் எடுத்துக்கொண்டு நடத்தவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

(இ) மேற்சொன்ன எல்லா விடுதிகளும் வாடகைக் கட்டடங்களில் உள்ளன.

(உ) இல்லை.

(*a*) Thirteen new Government Harijan Hostels for Boys were ordered to be opened and six subsidised hostels for Boys were ordered to be taken over by the Government during 1964–65.

(*b*) All the above hostels are located in rented buildings.

(*c*) Nil.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த வாடகை கொடுப்பதிலே ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது ? இந்த வாடகை கொடுப்பதால் அதிகமான பணம் செலவு ஆகிறது என்ற காரணத்தினால், அதனை படிப்படியாக சர்க்கார் கட்டடங்களாக மாற்றி கட்ட அரசினருக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவேயே அந்த உத்தேசம் இருக்கிறது. படிப்படியாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. முருகையன் : ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வாடகை கொடுக்கப்படுகின்றது என்று கேட்டேன் ? எவ்வளவு என்று அறியலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Repatriates from Burma

*** 95 *Q*.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state the various schemes envisaged by the Government for relief and rehabilitation of repatriates from Burma who have arrived in this State ?**